IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**MCOP.No.26/2022**

**நாள்– 01.11.2023**

**யோசேப்பு**

**ம.சா.1** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இந்த விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. அதனால் விபத்து எவ்வாறு நடந்தது என்று எனக்கு நேரடியாகத் தெரியாது. விபத்து சமயத்தில் என்னுடைய மகன் லாரி கிளினராக இருந்து மாதம் 22,500/–ரூபாய் சம்பாதித்தார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் நான் தான் தகவல் கொடுத்தேன். ராபின் என்பவர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து தான் என்னுடைய மகன் சென்றார். புகாரில் ராபின் தான் அதிவேகமாக சென்று பைக்கின் பக்கவாட்டு ஸ்டாண்ட் கீழே இறங்கி பைக் கீழே விழுந்ததில் விபத்து ஏற்பட்டதாக கூறியிருக்கிறேன் என்றால் காவல் நிலையத்தில் என்னிடம் கையெழுத்து மட்டும் பெற்றுகொண்டார்கள். நான் கொடுத்த புகாரில் டெம்போ டிராவலரைப் பற்றி எதுவும் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த முதல் தகவல் அறிக்கைக்கு விரோதமாக சாட்சியம் அளிப்பதால் என்னுடைய மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. என்னுடைய மகன் சென்ற வாகனத்தை ஓட்டிச் சென்ற நபருக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய மகன் சென்ற வாகனம் ராஜன் என்பவருக்கு பாத்தியப்பட்ட இருசக்கர வாகனம் என்றால் சரிதான். ராஜன் என்பவர் ராபின் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று தெரிந்து அவரை வாகனத்தை ஓட்டுவதற்கு அனுமதித்ததால் அவர் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தை ஓட்டியவரின் கவனக்குறைவினால் தான் இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது என்றும், 1ம் எதிர்மனுதாரரின் டெம்போ டிராவலரினால்

விபத்து ஏற்படவில்லை என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய மகனின் வயது, வருமானத்தை அதிகமாகக் காட்டியும், இழப்பீடு அதிகமாகக் கோரியும் இந்த மனுவைத் தாக்கல் செய்திருப்பதால் 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து எங்களுடைய மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

26.12.2021ல் ஏற்பட்ட விபத்தில் என்னுடைய மகன் மரணமடைந்துவிட்டார் என்றால் சரிதான். விபத்தின்போது 3ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டி பின்னால் என்னுடைய மகன் அமர்ந்து சென்றார் என்றால் சரிதான். அப்போது 1ம் எதிர்மனுதாரரின் டெம்போ டிராவலர் இடித்ததில் இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது என்றால் சரிதான். கடையம் காவல் நிலையத்தில் என்னிடம் வெற்றுத் தாளில் கையெழுத்தை மட்டும் பெற்றுகொண்டு டெம்போ டிராவலர் ஓட்டுநரை விசாரிப்பதாகக் கூறி என்னை அனுப்பிவிட்டார்கள் என்றால் சரிதான். கடையம் காவல்துறையினார் சரிவர விசாரணை செய்யாமல் 3ம் எதிர்மனுதாரர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருக்கிறார்கள் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு முழு காரணமும் டெம்போ டிராவலர் தான் என்றால் சரிதான். விபத்திற்கு இழப்பீடு வழங்கவேண்டுமென்றால் 1ம் எதிர்மனுதாரரும், அவருடைய காப்பீடு கழகமும் தான் வழங்கவேண்டும் என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இந்த மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

<u>5ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

விபத்தின் போது என்னுடைய மகன் மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து சென்றார். மோட்டார் சைக்கிளை ஓட்டிய நபருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முதல் தகவல் அறிக்கை மற்றும் பிரேதப்பரிசோதனையை தவிர வேறு குற்ற வழக்கு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என்னுடைய மகன் சென்ற இருசக்கர வாகனத்திற்கான காப்பீடு Liability Policy ஆகும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. Liability Policy என்பதால் நாங்களோ, விபத்தில் இறந்தவரோ காப்பீடு கழகத்தைப் பொறுத்தவரை 3ம் தரப்பினர் கிடையாது என்றால் சரியல்ல. பின்னால்

அமர்ந்து சென்றவருக்கு 4ம் எதிர்மனுதாரர் கூடுதல் பிரீமியம் எதுவும் செலுத்தவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் டெம்போ டிராவலர் ஓட்டுநரின் கவனக்குறைவினால் தான் விபத்து ஏற்பட்டதாகக் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு அவர் தான் காரணம் என்பதால் 1, 2 எதிர்மனுதாரர்கள் தான் நஷ்ட ஈடு வழங்கவேண்டும் என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரர் இந்த விபத்திற்கு காரணம் இல்லை என்பதாலும், Liability Policy என்பதாலும் இந்த எதிர்மனுதாரர் எங்களுக்கு இழப்பீடு கொடுக்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நாங்கள் கோரியிருக்கும் இழப்பீடு அதிகம் என்றும், என்னுடைய மகனின் வயது, வருமானம் ஆகியவற்றை மிகைப்படுத்திக் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 5ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இம்மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.11.01 15:30:50 +0530